ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பிய வழி புறநானூற்றின் புறத்திணைக் கோட்பாடுகள்

ரா.திலகவதி,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரட்டடிபாளையம், கோபி -638453.

முனைவர் எஸ்.சுந்தரன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரட்டடிபாளையம், கோபி -638453.

ஆய்வுச்சுருக்கம்

தமிழரின் சிறந்த பண்பாடாக விளங்குவது காதல்,வீரம் இரண்டுமாகும். இதில் காதல் வாழ்க்கையை களவு,கற்பு என்று இரண்டு பிரிவாக பிரித்தனர். வீரம்,கொடை,வெற்றிச் சிறப்பு,மன்னன் உயர்வு போன்றவற்றை புறத்திணையில் வைத்தனர். ஒவ்வொரு அகத்திணைக்கு ஏற்ப புறத்திணையைத் தொல்காப்பியர் வகுத்தார். தொல்காப்பியத்தைப் பின்பற்றியே பிற்கால இலக்கியங்கள் தோன்றின. அத்தகைய பிற்கால இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றின் திணைக் கோட்பாடுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் புறத்திணையியல் என்றஒருதனிஅதிகாரம் வகுத்து கூறியுள்ளார். அகத்திணைக்கு பல அதிகாரம் வகுத்த அவர் புறத்திணையியலில் புறம் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் தந்துள்ளார். அன்பின் ஐந்திணை அல்லாது கைக்கிளை, பெருந்திணை ஈறாக சொல்லப்பட்ட ஏழு திணைகளுக்கும் புறத்திணைஅமைத்துள்ளார். ஒவ்வொருதிணைக்கு ஏற்ப பல துறைகளையும் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. அத்தகைய தொல்காப்பிய புறத்திணையின் வழி புறநானூறு பற்றி ஆராயப்படுகிறது.

தனிமனிதன் ஒருவனின் கல்வி,ஈகை,புகழ்,வீரம் போன்றவற்றைப் பிறருக்குப் புரியும்படியாகப் பெயரைக் கூறி எடுத்துரைப்பது புறப்பொருளாகும். பலரும் அறிந்துமகிழும்படி ஒருவனின் பண்புகளைக் கூறுவதால் புறம் என்பதுகாரணப் பெயராகும். ஒருமனிதனின் பொதுவாழ்வியலைப் பற்றி எடுத்துரைத்துப் பகிர்ந்து கொள்ளும்படியாக அமைவதனைத் தமிழ் முன்னோர் புறம் எனச் சிறப்பித்தனர். பண்டைத் தமிழரின் போர் வாழ்க்கையையும் புகழ் வாழ்க்கையையும் விளக்கமுறக் கூறுவது புறத்திணையிலாகும்.

கலைச்சொற்கள்
தன்னுறுதொழில், மன்னுறுதொழில், திணை, கடல்கோள், ஆநிரை.

சங்க இலக்கியம் காதல்,வீரம் ஆகிய இரண்டையும் கூறுகிறது. பாண்டியமன்னர்கள் சங்கம் வைத்து தமழ் வளர்த்தார்கள். கடல்கோளால் அழிந்த சங்க ஏடுகள் போக மீதமுள்ளவற்றை தேடி தொகுத்து பெறப்பட்ட நூல்களே இன்று நமக்குக் கிடைத்தவை ஆகும். இதனைத் தமிழண்ணல்,

'சங்கத் தொகைப் பாடல்கள் அனைத்தும் அகம் புறமாகியதிணைப்
பற்றியனவாதலின் அவற்றைத் திணை இலக்கியம் என்றுவகைமை
சுட்டுதலேபொருத்தமுடையதாகும்'

(தமிழண்ணல்,புதியநோக்கில் தமிழ் இலக்கியவரலாறு, ப.91)

என்று குறிப்பிடுகின்றார். திணை இலக்கியங்கள் நிலஅடிப்படை உடையது. இதனை நிலமும் பருவப்பொழுதுகளும் இயற்கையும் இவற்றைப் பின்னணியாகக் கொண்ட மனிதவாழ்வும்

*இயைபு படப் புனையப்படுவதே திணை இலக்கியமாகும். நிலச் சாயலும் அதில் வாழும் உயிரினச் சாயலும் மனித வாழ்வுச்சாயலும் ஓவியமாகப் படிந்து கிடப்பதே திணை இலக்கியமாகும்.*

*தமிழகம் முன்பு இயற்கைச் சூழலில் மலை,காடு,வயல்,. கடல் என நான்கு சமநிலைப் பகுப்புடன் விளங்கியது. இவற்றில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் நிலையும் அவர்கள் சார்ந்துள்ள நிலத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. இம்மக்களிடையே முகிழ்ந்த இலக்கியங்களும் இந்நிலஅடிப்படையிலும், இந்நில இயல்புகளாலும் 'திணை இலக்கியம்'என்றபொருண்மையில் வழங்கப்பட்டன.*

*திணைமரபுஅடிப்படையில்*

*ஆரம்பகாலத்தில் செய்யுள்கள் யாவும் விதிகள்,மரபுக் கட்டுப்பாடுகள் ஏதும் இன்றித் தன்னியல்பான எழுச்சியாக இயற்கையானதாக அமைந்திருக்கலாம். அவை தன்னியல்புச் செய்யுள் எனப்பட்டன. பின்னர் கடுமையான கட்டுப்பாடுகளோடு மிகச் செப்பமான செய்யுட்கள் புலவர்களால் இயற்றப் பட்டிருக்கவேண்டும். அதற்குப்பின் விதிகளோடு சரியாக இயைந்தும், முற்பட்ட மரபுகளைத் தழுவியும் அமைந்தசெய்யுட்கள் இயற்றப்பட்டிருக்கவேண்டும். இவ்வகைச் செய்யுள் மரபுச் செய்யுள்களாகும். சங்கத் திணைச் செய்யள்கள் மரபுகளைஉண்மையாகப் பின்பற்றிய புலவர்களால் இயற்றப்பட்டன என்பதற்கும் சிலகாரணங்கள் கூறப்படுகின்றன.*

*'ஒவ்வொருதிணைச் செய்யுளும் குறித்த நோக்கு எல்லைக்குட்பட்ட சிலபாடுபொருள்களையே பெற்றிருப்பதோடு பிறரால் கடைபிடிக்கப்பட்ட செய்யுள் வடிவம், கருத்துக்கள் ,அணிகள் பிறஉத்திகளைப் பின்பற்றுகிறது பலதிணைப் பாடல்கள் அவற்றின் போக்கில் திணையைக் கூறுமாறு இயற்றப்பட்டிருக்கின்றன. அதாவது நெய்தல் திணைப் பாடல்களில் ஏதோ ஒருகாரணத்திற்காக நெய்தல் மலரின் பெயர் அடிக்கடி இடம் பெறுகின்றது. அவ்வாறே முல்லைத்திணைப் பாடல்களில் முல்லைமலரின் பெயர் ஓர் உவமையாக அல்லது உருவகமாகவோ குறியீடாகவோ கூறப்படுகின்றது.*

*'திணைப்பெயர்கள் வருவதுமட்டுமின்றித் துறைகட்குரிய செய்யுளியல் சார்ந்தமரபுவழிப் பெயரீடுகளும் பாட்டின் பொருளைக் குறித்துக் காட்டும் பாங்கில் இடம்பெறுகின்றபாடல்கள் பலஉள்ளன (தமிழண்ணல்,சங்கமரபு, ப.301)*

*என்றுபி.டி. சீனிவாசஐயங்கார் குறிப்பிடுகிறார்.*

*திணை*

*திணைஎன்பதைப்*

*'பெயரும் வினையும் என்று ஆ இருவகையும்*
*திணைதொறும்; மர்இய திணைநிலைப் பெயரே'*

*(முனைவர் அ.ச.ஞானசம்பந்தர்,தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூ.22)*

*என்ற நூற்பா வழி அறிந்துகொள்ளமுடிகிறது.*

*திணைச் செய்யுள்கள் முதன்மை வகைப்பாடு அந்தந்த நிலப்பகுதிகளின் பெயர்களைக் கொண்டுவழங்கப் பெற்றன. தலைமையான பாடுபொருளுக்குப் பின்னணியாக அமைந்த உவமைகள், குறிப்புமொழிகள் என்ற திணைச் செய்யுள் கூறுகளின் விளக்கங்கள் யாவும் தமிழக நிலப்பகுதிகள், இயற்கைப் பொருள்கள் காலநிலைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டன. இவ்வாறாகத் திணைச் செய்யுளின் சிறப்புடைய தனித்தன்மைஅக்காலநில இயலின் தாக்கத்தைக் கொண்டதாகும்.*

*'திண்ணிய தான நிலத்தையே முதலில் திணை என்னும் சொல் குறித்தது. பிறகு இச்சொல் அந்நிலத்தில் பிறந்த குலத்தினரை குடியினரைக் குறிக்கலாயிற்று. அதன்பின் அம்மக்களின் ஒழுக்கத்தையும் இச்சொல் குறித்தது'(வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-10, ப.252)*

*என்று விளக்குவதிலிருந்து திணை என்றசொல் ஒழுக்கத்தினைக் குறிக்கின்றது. மேலும், இதற்கு*

*'ஒழுக்கமேதிணைஎனப்படும் குறிஞ்சிஆகியஒழுக்கம் நிகழ்ந்த*
*நிலமும் குறிஞ்சிஎனப்பட்டது. எண்ணெய் விளக்காகியசுடர் இருந்த*
*இடமும் விளக்கெனப்பட்டதுபோல' (இறையனார் களவியல் உரை, ப.22)*

*என்று இறையனார் களவியல் உரையாசிரியர் கூறுகின்றார்.*

பொருளதிகாரத்தில் திணை என்பது மக்களின் ஒழுகலாற்றையும் அவ்வொழுகலாற்றிற்குரிய பண்பும் தொழிலுமாகிய செயல்களையும் அவற்றிற்கு அடிப்படையான துணைப் பொருள்களையும் ஒருங்கே சுட்டும் இலக்கணக் குறியீடாகும். அஃது இலக்கணமுறைமையாற் கூறுமிடத்து முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றிற்கும் உரிமையுடையதொரு தொகுதிப்பெயராக அமைவதாகும்.

வெட்சி

ஆநிரைகவர்தல் வெட்சித்திணைஆகும். இதனைபன்னிருபடலம்

'தன்னுறுதொழிலே வேந்துறுதொழிலே என்று
அன்ன இருவகைத்தேவெட்சி'

நான்கு வருணத்தாரிலும் மேம்பட்டவர் அரசர். பிறரை வென்று திறைப்பொருள் பெற்று மேம்பட்டுவாழும் செயல் அரசருக்கு மிகுந்தசிறப்பையும் மதிப்பையும் தருவதாகும். போர் செய்வதற்குரிய செயல்களுள் தொடக்கமாக அமைவது ஆநிரைகவர்தலாகும். எனவே தான் போர் தொகுத்தலின் அறிவிப்பாக விளங்கும் வெட்சித்திணை தொல்காப்பியரால் முதலில் கூறப்பட்டது.

புறப்பொருள் வெண்பாமாலையும் வெட்சியைத் தன்னுறுதொழில்,மன்னுறுதொழில் என இரண்டாகப் பகுத்துக் கூறுகிறது. வஞ்சி,உழிஞை,தும்பைஆகியதிணைகளின் துறைகள் பலவும் அரசனின் ஏவலால் மட்டுமேநடைபெறுவன. அப்படி இருக்கவெட்சித்திணைவேந்தனைத் தவிர்த்தும் நடைபெறும் என்பதுபொருத்தமற்றது. மறவர் தாமேஆநிரையைக் கவர்வதுஅரசனின் ஆணையைமீறியசெயலாகும். இக்கருத்துபற்றியேதொல்காப்பியர் மன்னுறுதொழிலைமட்டுமேஎடுத்துரைக்கிறார். இதனைப் புறநானூறு

'முட்கால் காரைமுதுபழன் ஏய்ப்பத்
தெறிப்பவிளைந்ததீங்கந் தாரம்
நிறுத்தஆயம் தலைச்சென்றுஉண்டு
பச்சூன் தின்று,பைந்நிணப் பெருத்த
எச்சில் ஈர்ங்கைவிற்புறம் திமிரிப்' (புறம்.258: 1-5)

இந்தப்பாடல் உண்டாட்டுஎன்னும் துறையில் அமைந்தபாடலாகும். ஆநிரைகவர்ந்துவரும் வீரம் ஒருவனுக்குச் சாடியில் விளைந்தகள்ளைவிருந்தாகத் தாருங்கள் என்று கூறுகிறது. காந்தாரம் என்பதுஒருவகைக் கள். அதுமுதிர்ந்தகாரைப்பழம் போலநுரைவிட்டுக்கொண்டுவிளைந்திருக்கும். இந்தவீரன் ஆநிரைகளைக் கவர்ந்துகொண்டுவந்து இந்தக் கள்ளுக்குவிலையாகவழங்குவான். ஒருமறவனின் களிப்பினை இப்பாடல் வழி அறியமுடிகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலைமன்னுறுதொழில்,தன்னுறுதொழில் என்று கூறுகின்றது.

'வென்றிவேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்று இகல்முனைஆதந் தன்று' (புறப்பொருள் வெண்பாமாலை, ப.14)

வெற்றியைஉடையஅரசன் தன்னுடையவீரர்களைநோக்கிப் பகைவருடையஆநிரைகளைக் கவர்ந்துவருமாறுகட்டளை இடுவான். அரசன் ஏவாமல் இருக்கவும் அவன் குறிப்பறிந்தமறவர் தாமேசென்றுபகைப்புலத்தில் உள்ளஆநிரைகளைக் கவர்ந்துவருவர் இவ்விருதன்மைகளைக் கொண்டதாகபுறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது.

வஞ்சி

வஞ்சித்திணைஎன்பதுதம் நிலஎல்லைகளைவிரிவுபடுத்திக் கொள்ளும் அரசர்களுக்கிடையேநிகழும் போரைக் குறிப்பதாகும். புறநானூற்றில் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் தங்களதுஎல்லைகளைவிரிவுசெய்வதற்காக இருவருக்கிடையேபோர் ஏற்பாடுசெய்யப்பட்டநிலையில் அவர்களைத் தடுக்கும் பொருட்டு

'இரும்பனைவெண்தோடுமலைத்தோன் அல்லன்
கருஞ்சினைவேம்பின் தெரியலோன் அல்லன்

*நின்னகண்ணியும் ஆர் மிடைந்தன்றேநின்னொடு*

*பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்தன்றே'* (புறம்.45: 1-4)

*புலவர் கோவூர்கிழார் இருவரும் சோழர் குலத்தைச் சேர்ந்தவர்கள் போரிட்டுக் கொள்வதுமுறையன்றுஎன்று இருவருக்கும் அறிவுரை கூறிபோரைத் தடுத்தார்.*

*பாடாண்*

*பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகள் பற்றி கூறுவது.*

*'பாணர் தாமரைமலையவும், புலவர்*

*பூநுதல் யானையோடுபுனைதேர்*

*பண்ணவும்*

*அறனோமற்ற இது விறல் மாண் குடுமி*

*இன்னாஆகப் பிறர் மண் கொண்டு*

*இனியசெய்திநின் ஆர்வலர் முகத்தே'* (புறம்: 12)

*முதுகுடுமிப் பெருவழுதியேபாணர்க்கும் பொன்னால் செய்ததாமரைமாலை சூட்டியும், புலவர்க்குஅலங்கரிக்கப்பட்டதேருடன் நெற்றியில் பொற்பட்டத்தால் அலங்கரிக்கப்பட்டயானையையும் அளித்துஉன்னிடம் பரிசுபெறுவோர்க்குநீநல்லவைசெய்துமறுபுறம் உன் பகைவர்களுக்குதுன்பம் நேரும்படிஅவர்களுடையநாட்டைவெற்றிகொள்வதுஅறமாஎன்றுபழித்ததுபோல் புகழ்ந்ததாகஅமைந்துள்ளது.*

*முடிவுரை*

*தொல்காப்பிய இலக்கணமரபுப்படிபாகுபடுத்தப்பட்டஅகம், புறம் என்றதிணைப் பாகுபாடுசங்க இலக்கியப் பாடல்கள் முழுவதிலும் காணப்படுகின்றது. சங்கப் பாடல்கள் எல்லாம் புலவர்களால் மன்னர்களின் முன்னிலையில் பாடப்பட்டவையாகும். தொல்காப்பியமே இன்றைக்குநமக்குக் கிடைத்தமுழுமுதற் இலக்கண நூலாகும். அத்தகையதொல்காப்பிய நூற்பாவைப் பின்பற்றியேபின்னர் தோன்றிய இலக்கண இலக்கிய நூல்கள்; உருவாக்கப்பட்டன. புறத்திணையியல் அடிப்படையில் தோன்றியசங்க நூல் புறநானூறு ஆகும். அத்தகையபுறநானூற்றுபாடல்களின் சிலதிணைகளைமட்டுமேஆராய்ந்துமுடிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.*

*துணைநூற்ப்பட்டியல்*


1. *தமிழண்ணல், புதியநோக்கில் தமிழ் இலக்கியவரலாறு*
2. *தமிழண்ணல், சங்கமரபு, மீனாட்சிபுத்தகநிலையம், மதுரை, இரண்டாம் பதிப்பு, 2012.*
3. *முனைவர்.அ.ச.ஞானசம்பந்தர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு*
4. *வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-10*
5. *நக்கீரர் உரை, இறையனார் களவியல் உரை*
6. *புலியூர்க்கேசிகன், புறநானூறு, சாரதாபதிப்பகம், சென்னை, டிசம்பர், 2010*
7. *முனைவர் சு.ச.ஞானசம்பந்தர், புறப்பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம், திருவையாறு, செப்டம்பர், 2015*


********* ********* ********** ********* ********* ********** ********** **********